2015 ஏப்ரல் 1]

113—

கால்நடைக் கிளை நிலையம்

***47383—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சி, வெள்ளூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வெள்ளூர் ஊராட்சியிலே கால்நடை பராமரிப்புத் துறை விதிகளின்படி, 3,000-க்கும் அதிகமான அலகுகள் உள்ளதால், அரசு விதிகளின்படி கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி மக்களின் நீண்ட, நெடுநாள் கனவான ராமமூர்த்தி சாலை மேம்பாலப் பிரச்சினையில் தீய சக்திகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை அகற்றி, மேம்பாலம் அமைக்க நேற்று ஆணை பெற்றுத் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றி மலர்களை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2015 ஏப்ரல் 1

முற்பகல் 10-50

"The greatness of a Nation and its moral progress can be judged by the way its animals are treated" என்பது மகாத்மா காந்தியின் மறையாத வரிகள். "ஒரு நாட்டின் உன்னதமும், அதன் ஆன்ம உயர்வும், அந்த நாடு தன் வாயில்லா ஜீவன்களை எப்படி நடத்துகிறது என்பதனை வைத்தே அறியப்படுகிறது" என்ற மகாத்மாவின் வார்த்தைக்கு வடிவம் தரும் வகையில், விலையில்லா கறவை மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம், கால்நடைத் துறை வாயிலாக நமது பொருளாதாரத்திற்கு 4 சதவிகித பங்களிப்பும், வேலைவாய்ப்பில் 5 சதவிகித பங்களிப்பும் வழங்கிவரும், "ஆவினத்திற்கும் ஆனந்தம் தரும்" மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் வெள்ளூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி. வெள்ளூரைச் சுற்றியுள்ள சிதம்பராபுரம், முத்துக்குமராபுரம், அம்மன்கோவில்பட்டி, சாத்தப்பிள்ளைப்பட்டி, கவுண்டம்பட்டி, மேலாமத்தூர், குமாரபுரம், சேர்வைக்காரன்பட்டி உள்ளிட்ட குக்கிராம மக்களின் வாழ்வாதாரமாகக் கால்நடை வளர்ப்பு விளங்குகிறது. கடந்த நான்கு வருடங்களில் அரசின் சீரிய திட்டங்களின்மூலம் இந்தப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குமிழங்குளம் கால்நடை மருந்தகத்திற்கு மக்கள் செல்ல வேண்டியுள்ளது. வெள்ளூரிலேயே கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி, நேரடியாக மருந்தகம் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை. முதலிலே 3,000 அலகுகள் இருக்கும்போது கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும். அதுவே 5 ஆயிரம் அலகுகளாக எண்ணிக்கை அதிகமாகும்போது, மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். அதுவே 10 ஆயிரம் அலகுகளாக

எண்ணிக்கை அதிகமாகும்போது மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும்; இதுதான் விதி. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு, அங்கே 5 ஆயிரத்திற்கும் அதிகமாக கால்நடைகளின் அலகுகள் இருக்குமென்று சொன்னால், அது சிறப்பு நேர்வாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு உறுதி தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருதுநகர் தொகுதியில் கால்நடை உறைவிந்து வங்கிக் கட்டடம் கட்டும் பணிகள் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடைபெறுவதற்கும், இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்தமைக்கும் நன்றி. அதைப்போல், விருதுநகரில் 24 மணி நேரம் செயல்படும் ஈனியல் அறுவை சிகிச்சை சிறப்புப் பிரிவுகள் இயங்கும், உதவி இயக்குநர் நிலையில் உள்ள முதன்மை மருத்துவர் மற்றும் உதவி மருத்துவர்கள் செயல்படும் கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பட்ஜெட் வரலாற்றிலேயே, கால்நடைத் துறை ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைப் பார்த்ததேயில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) பட்ஜெட்டிலே ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி இந்தத் துறைக்கு நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். கடந்த நான்கு ஆண்டுக் காலமாக, ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கிக் கொண்டிருக்கின்றார்கள். வாக்களித்த மக்களை

மட்டுமல்ல; வாயில்லா ஜீவன்களையும் காக்கக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே மருத்துவமனை அமைக்க முடியுமா என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

ஊதிய உயர்வு

*__20292—திரு. என்.எஸ்.என். நடராஜ்:__

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது சம்பந்தமாக வினா எழுப்பியுள்ளார். கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்விதமாக, அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும், ஏற்கெனவே அவர்கள் பெறும் அடிப்படைக் கூலியில், 2011 ஆம் ஆண்டு 10 சதவிகிதம் உயர்வும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலே, தலா 10, 10 சதவிகிதம் உயர்வும் வழங்கப்பட்டது. அதைப்போலவே, ஏற்கெனவே அடிப்படைக் கூலியுடன் வழங்கப்பட்டு வந்த 105 சதவிகித அகவிலைப் படி 2014 ஆம்